2026 பிப்ரவரி மாதம் 23- ஆம் தேதி திங்கட்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 58/2016

2026-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23- ஆம் தேதி திங்கட்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.6-வது நபரின் வாக்குமூலம்

(1969-ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | DW6 – சுப்பிரமணி |
| தந்தை பெயர்: | அருணாச்சலம் |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | -- |
| வயது : | 76 |

23.02.2026

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**முதல் விசாரணை**–

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு 6 வது சாட்சியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை பிரதிவாதி தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 உயிலில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

எனது சொந்த ஊர் தேனி ஆகும். சீனிவாசன் எனது நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். தாவா வழக்கு என்ன வழக்கு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சீனிவாசனுக்கு என்னென்ன சொத்துக்கள் உள்ளன என்று எனக்கு தெரியுமா என்றால் தோப்பு, வீடு, கேரளாவில் உள்ள எஸ்டேட் ஆகிய சொத்துக்கள் குறித்து விபரம் எனக்கு தெரியும், மேற்படி சொத்துக்கள் சீனிவாசனின் பூர்வீகச் சொத்துக்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 உயில் எழுதிவைத்த தேதியில் சீனிவாசன் குடும்பத்தில் இருந்த பிரச்சனைகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 10.10.2012 ம் தேதி உயில் எழுதிவைத்து 14.10.2012 ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 10.10.2012 ம் தேதி எழுதிவைத்த உயில் கட்டாயப்படுத்தி எழுதி வைத்ததால் அவர் மனஉளைச்சலில் இருந்து இறந்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சீனிவாசனின் குடும்பத்திற்கு வேண்டியவன் என்பதால் பிரதிவாதிகளுக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 23.02.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.23 18:43:07 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
23.02.2026.